# விலிங்டன் சீமாட்டி
# கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழக இணைவு பெற்றது

(தன்னாட்சி)

(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவால் "B" கிரேடு தரச் சான்று பெற்றது)

திருவல்லிக்கேணி, காமராஜர் சாலை,

சென்னை 600 005. ☎ : 044 2844 5531

LADY WILLINGDON INSTITUTE OF ADVANCED STUDY IN EDUCATION

உண்மையே பேசு

## நாட்குறிப்புக் கையேடு

## திருவள்ளுவர் ஆண்டு 2049 -. 2050

# 2018 - 2019

PRINCIPAL
LADY WILL... ADVANCED S... CHENNAI

# விலிங்டன் சீமாட்டி
# கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழக இணைவு பெற்றது

(தன்னாட்சி)

(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவால் "B" கிரேடு தரச் சான்று பெற்றது)

திருவல்லிக்கேணி, காமராஜர் சாலை,

சென்னை 600 005. ☎ : 044 2844 5531

## நாட்குறிப்புக் கையேடு

## திருவள்ளுவர் ஆண்டு 2049 - 2050

# 2018 - 2019

# விலிங்டன் சீமாட்டி
# கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழக இணைவு பெற்றது

**(தன்னாட்சி)**

(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுவால் "B" கிரேடு தரச் சான்று பெற்றது)

திருவல்லிக்கேணி, காமராஜர் சாலை,

சென்னை 600 005. ☎ : 044 2844 5531

1. பெயர் : ..................................................................

2. வகுப்பு : ..................................................................

3. சுழலெண் : ..................................................................

4. சிறப்புப் பாட இணைவு ..................................................

5. பொறுப்பாசிரியர் பெயர் : ..................................................

பதவி : ..................................................

6. தற்காலிக முகவரி : ..................................................

..................................................................................................

..................................................................................................

7. நிரந்தர முகவரி : ..................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

## தமிழ்த்தாய் வாழ்த்து

*இராகம் : மோகனம்* *தாளம் : திஸ்ரம்*

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்க சிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெரும் தமிழணங்கே
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!! வாழ்த்துதுமே!!!

*– மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை*

## கொடி வணக்கம்

**பல்லவி**

தாயின் மணிக்கொடி பாரீர்! – அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

**சரணங்கள்**

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் – அதன்
உச்சியின் மேல் வந்தேமாதரம் என்றே
பாங்கின் எழுதித்திகழும் செய்ய
பட்டொளி வீசிப்பறந்தது பாரீர்! (தாயின்)
கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர் – எங்கும்
காணரும் வீரர் பெருந்திரள் கூட்டம்
நம்பற் குரியரவ் வீரர் – தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர் (தாயின்)

*– மகாகவி சுப்ரமணிய பாரதியார்*

## தேசிய கீதம்

ஜனகண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே தவசுப ஆசிஷ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

*– மகாகவி ரவிந்திரநாத் தாகூர்*

## உறுதிமொழிகள்

### தாய்நாடு

"இந்தியா எனது தாய்நாடு" இந்தியர் அனைவரும் என் சகோதர, சகோதரிகள்.

நான் என் நாட்டினை நேசிக்கிறேன். செல்வாக்குள்ளதும் பலதரப்பட்டதுமான அதன் பாரம்பரியத்தில் நான் பெருமிதம் கொள்கிறேன். நான் அதற்குத் தகுதியுடையவனாயிருக்க எப்போதும் முயல்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், பெரியவர் அனைவரிடமும் மரியாதை செலுத்துவேன். எல்லோரிடமும் பண்புடன் நடந்து கொள்வேன். என் நாட்டினிடமும், மக்களிடமும் பக்தி கொள்வேன் என உறுதி கூறுகின்றேன். அவர்களது நல்வாழ்விலும், வளர்ச்சியிலுமே என் மகிழ்ச்சி அடங்கியுள்ளது.

### தேசிய ஒருமைப்பாடு

நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்த செயல்படுவேன் என உளமார நான் உறுதி கூறுகிறேன்.

ஒருபோதும் வன்முறையை நாடேன், என் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கு அமைதி நெறியிலும், அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன் என்று நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

### தீண்டாமை ஒழிப்பு

இந்திய அரசியலமைப்பின் பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான், நம் அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர் மீதும் தெரிந்தோ தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, காயம் என்ற எந்த வகையிலும் கடைப்பிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியல் அமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்கச் சமய வேறுபாடற்ற, சுதந்திர சமுதாயத்தை உருவாக்குதல், நேர்மையுடனும் உண்மையுடனும் பணியாற்றுவது என் கடமையாகும் என்பதை உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்கு உள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன்.

## BUILDERS

A builder built a temple
He wrought it with grace and skill;
Pillars and groins and arches
All fashioned to work his will.
Men said, as they saw its beauty,
"It shall never know decay;
Great is thy skill, O Builder!
Thy fame shall endure far aye!"

A teacher built a temple
With loving and infinite care,
Planning each arch with patience,
Laying each stone with prayer,
None praised her unceasing efforts,
None knew of her wondrous plan,
For the temple the teacher built
Was unseen by the eyes of men

Gone is the builder's temple,
Crumpled into the dust;
Low lies each stately pillar,
Food for consuming rust,
But the temple the teacher built
Will last while the ages roll,
For the beautiful unseen temple
Was a child's immortal soul.

***- Hattie Vose Hall***

# ஓர் ஆசிரியரின் பிரார்த்தனை

எனக்களிக்கப்பட்ட இவ்வாசிரியப் பணியின் உயர்வினையும், பெருமையினையும் நான் என்றும் நினைவிற் கொள்ள உதவுக.

இவ்வுலகில் விலை மதிப்பற்ற பொருளாகிய குழந்தையின் மனம் என் பணியின் மையப்பொருள் என்பதை மறத்தலாகாது. அம்மனதில் காலத்தால் அழிக்க முடியாத அடையாளங்களை ஏற்படுத்துகிறேன் என்பது என்றும் என் நினைவிலிருந்து மறைதல் கூடாது.

கடை மாணாக்கரிடமும், கற்க மறுக்கின்றவரிடமும் நான் நாளும் பொறுமை காட்டுதல் வேண்டும்.

ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய சந்தர்ப்பங்களில் அதனை அன்புகலந்த கண்டிப்புடன் நிறைவேற்றுவேனாக, ஏளனப் பேச்சுக்களையும் கடுஞ்சொற்களையும் தவிர்த்தல் வேண்டும். முழுத்திறமையுடன் செயலாற்றுபவர்களை அதைரியப்படுத்தாமல் ஊக்குவிக்க வேண்டும்.

தங்கள் அறிவுக் களஞ்சியத்தில் வெறும் கருத்துக்களைச் சேர்த்து வைத்துக் கொள்வதற்கு மட்டுமின்றி, அவ்வறிவினைப் பயன்படுத்துவதற்கும், சிந்திப்பதற்கும், குழந்தைகளுக்கு நான் துணை புரிய வேண்டும்.

என்னுடைய பணியின் பல்வேறு தொல்லைகள், உறுத்தல்கள், ஏமாற்றங்கள் ஆகியவற்றுக்கிடையில் இந்த நாட்டின், உலகத்தின் எதிர்காலமே என் கையின்தான் அடங்கியிருக்கிறது என்பதை என்றும் நான் மறவாதிருக்க உதவுக.

*– வில்லியம் பார்கலே*

# A TEACHER'S PRAYER

Help me to remember the greatness of the work which has been ordained to me.

Help me always to remember that I work with the most precious materials in the world, the mind of a child. Help me always to remember that I am making marks upon that mind which time will never rub out.

Give me patience with those who are slow to learn and even with those who refuse to learn.

When I have to exercise discipline, help me to do so in sternness and yet in love.

Keep me from the sarcastic and the biting tongue and help me always to encourage and never to discourage those who are doing their best, even if that best is not very good.

Help me to help those children, not only to store things in their memories, but to be able to use their minds and to think for themselves.

And amidst all the worries and the irritation and the frustrations of my job, help me to remember that the future of the nation and of the world is in my hands.

***- William Barclay***

## கல்லூரி வரலாறு

கீழ்த்திசையில் வங்கக்கடல் வந்து வணக்கமிட, பவளவிழா கண்டு, இனிய நூற்றாண்டு விழாவை நோக்கி, வீறு நடைபோடும் வில்லிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு வளர்ச்சி நிலைகளைக் கடந்து, ஐந்து நட்சத்திர தகுதி பெற்று, இன்று "B" தகுதியுடன் தரணியில் பீடு நடை போடுகிறது.

முதன்முதலில் பெண்களுக்கென விஜயரங்கம் அறக்கட்டளை சென்னையில் இந்துப்பள்ளி ஒன்றைத் தொடங்கியது. அப்பள்ளி பின்னர் 1913ல் ஆரம்பப்பள்ளி, மற்றும் இடைநிலைப்பள்ளி ஆசிரியைகளுக்குப் பயிற்சியளிக்கும் பயிற்சிப்பள்ளியாக உருமாற்றம் பெற்றது. அப்பள்ளியே 1922இல் விலிங்டன் சீமாட்டி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி எனப் பெயர் மாற்றத்துடன் பட்டதாரிகட்கு ஆசிரியப் பயிற்சியளிக்கும் பயிற்சிக் கல்லூரியாகத் தன் அடிச்சுவட்டைப் பதித்தது. ஆரம்பம் முதல் 18 ஆண்டு காலம் குறைந்த தளவாட வசதிகளுடன் இயங்கிய இக்கல்லூரி 1940 ஆம் ஆண்டு முதல் தற்பொழுதுள்ள பரந்த நிலப்பரப்புடன் கூடிய வளாகத்தில் நல்ல வசதிகளுடன் கூடிய இக்கட்டிடத்திற்கு மாற்றம் பெற்றது.

இக்கல்லூரியின் தொடக்கம் முதல் 1946 ஆம் ஆண்டு வரை 24 ஆண்டுகள் செல்வி ஜெ.எம்.ஜெரால்ட் என்ற முதல்வரின் சிந்தனையாலும், சீரிய முயற்சியாலும் இக்கல்லூரி வளர்ச்சியடைந்துள்ளது. பின்னர் பல்வேறு முதல்வர்களின் கடும் உழைப்பால் காலந்தோறும் வளர்ந்து வருகிறது. இவர்களுக்கு நன்றி கூறும் முகத்தான் இவர்களின் திருவுருவப்படங்கள் கல்லூரிக் கலையரங்கில் வைக்கப்பட்டுள்ளன.

முதன்முதலாக 1923 – 24 ஆம் கல்வியாண்டில் 23 பட்டதாரி ஆசிரியைகள் இக்கல்லூரியிலிருந்து எல்.டி (கற்பித்தலுக்குரிய உரிமம்) பட்டம் பெற்று வெளிவந்தனர். தொடர்ந்து இக்கல்லூரி பட்டதாரி ஆசிரியைகளுக்குப் பயிற்சியளிப்பதோடு, மெட்ரிக் பள்ளிக் கல்வியில் தேர்வு பெற்ற மாணவியர்கட்கு இடைநிலைப் பள்ளி ஆசிரியப் பயிற்சியையும், எட்டாம் வகுப்புப் பயின்ற மாணவியர்கட்குத் தொடக்கப் பள்ளி ஆசிரியப் பயிற்சியையும் அளித்து வந்தது.

1940 வரை எல்.டி. என்று அழைக்கப்பட்டு வந்த பட்டம் 1941 முதல் பி.டி. (இளநிலைக் கற்பித்தல் - Bachelor of Teaching) பட்டம் என்று பெயர் மாற்றி அழைக்கப்பட்டது. அது தற்பொழுது இளநிலைக் கல்வியியல் பட்டம் பி.எட்., என்று அழைக்கப்படுகிறது.

இதுபோன்றே இடைநிலைப் பள்ளி ஆசிரியப் பயிற்சி என்பது முதுநிலை ஆதாரப் பயிற்சிக் கல்வி என்றும், தொடக்கப்பள்ளி ஆசிரியப் பயிற்சி என்பது இளநிலை ஆதாரப் பயிற்சிக் கல்வி என்றும் பெயர் மாற்றம் பெற்றது. பின்னர் இவ்விரண்டும் வழக்கற்று பள்ளி இறுதிக் கல்வியை முடித்தவர்கட்கு மட்டும் இடைநிலைப்பள்ளி ஆசிரியப் பயிற்சியளிக்கப்பட்டது. தொடர்ந்து அது கல்வியியல் பட்டயப்படிப்பாக மாற்றம் பெற்று, இந்நிறுவனத்திடமிருந்து பிரிக்கப்பட்டு மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இக் கல்லூரியின் தமிழ்ப் புலவர் அல்லது பி.லிட் பட்டம் பெற்றவர்களுக்கெனத் தமிழாசிரியர் பயிற்சி 1964 ஆம் ஆண்டு முதல்

1998 வரை கற்பிக்கப்பட்டது. இது ஐந்து மாத காலப் பயிற்சியாக, வருடத்திற்கு இரு முறை வழங்கப்பட்டது.

1972 முதல் 1975 வரை குறுகிய கால பி.எட் பட்ட வகுப்பு நடைபெற்று வந்தது. 1973 இல் முதன் முதலாக முதுநிலைக் கல்வியியல் பட்ட வகுப்பு மாலை நேர வகுப்பாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1981 முதல் அது முழுநேர வகுப்பாக இயங்கி வருகிறது. 1985 அக்டோபர் மாதம் 18 மாணவர்களைக் கொண்டு முன் பருவப் பள்ளி ஆசிரியர்களுக்கெனத் தனிப்பயிற்சி தொடங்கப்பட்டது.

1.4.1988 முதல் விலிங்டன் சீமாட்டி மேல்நிலைப் பள்ளியும், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும் கல்லூரி முதல்வரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலிருந்து பிரிந்து தனித்தனியே இயங்க ஆரம்பித்தன.

1990–91 இல் கணிப்பொறி அறிவியல் அறிமுகப்படுத்தப்பட்டது. 1991 ஆம் ஆண்டு இக் கல்வியியல் கல்லூரி என்ற நிலையிலிருந்து கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் என்ற உயர் தகுதியைப் பெற்றது. 1991 முதல் 1992 ஆம் ஆண்டு வரை இந்நிறுவனம் கல்லூரிக் கல்வி இயக்குநரிடமிருந்து பிரிந்து புதிதாக உருவாக்கப் பெற்ற ஆசிரியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தின் இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கியது. இந்நிலையில் பி.எட். பட்ட வகுப்பில் பருவமுறை கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

1993 ஆம் ஆண்டு முதல் இந்நிறுவனம் மீண்டும் கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணைக்குட்பட்டு, அல்பருவமுறை (Non – Semester) யில் இயங்கியது.

1998 ஆம் ஆண்டு எம்.ஃபில் ஆய்வுப் பட்ட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1972 ஆம் ஆண்டு இக்கல்லூரியின் பொன்விழாவும், 1983 ஆம் ஆண்டு வைரவிழாவும், 1999 ஆம் ஆண்டு பவள விழாவும் சிறப்பாக கொண்டாடப் பெற்றன.

18.2.2000 அன்று வருகை புரிந்த தேசியக் கல்வித்தர ஒப்புகை மற்றும் மதிப்பீட்டுக் குழுமம், இந்நிறுவனத்திற்கு ஐந்து நட்சத்திரத் தகுதியை வழங்கியது.

5.7.2006 அன்று பல்கலைக் கழக மானியக் குழு இந்நிறுவனத்திற்குத் தன்னாட்சி அதிகாரத்தை வழங்கியது.

31–3–2007 அன்று வருகை புரிந்த தேசியக் கல்வித்தகுதி ஒப்புகை மற்றும் மதிப்பீட்டுக் குழுமம், இக்கல்லூரிக்கு B++ தகுதியை வழங்கியுள்ளது.

இந்நிறுவனம் 2008 முதல் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்றுள்ளது.

2011–இல் பிஎச்.டி. பட்ட முழுநேர, பகுதிநேர வகுப்புகள் தொடங்கப்பட்டன.

2015–கல்வி ஆண்டு முதல் கல்வியியல் இளநிலை மற்றும் கல்வியியல் முதுநிலை வகுப்புகள் இரண்டு ஆண்டு படிப்பாக நடைபெற்று வருகிறது.

2016–இல் தேசியக் கல்வித் தகுதி ஒப்புகை மற்றும் மதிப்பீட்டுக் குழுமம் இக்கல்லூரிக்கு 'B' தகுதியை வழங்கியுள்ளது.

## கல்லூரி முதல்வர்

முனைவர் திருமதி **ம.ச. தில்லை நாயகி** (முதல்வர் பொறுப்பு)
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை

## பேராசிரியர்கள்

முனைவர். திருமதி **வெ. கலையரசி**
எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர், கல்வியியல் துறை

செல்வி. **வெ. சியாமளா**
எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எட்.
இணைப் பேராசிரியர், கல்வியியல் துறை

முனைவர். திருமதி **தே. ஹேமலதா கலைமதி**
எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர், உயிரறிவியல் துறை.

முனைவர். திருமதி **த. சுபாஷிணி**
எம்.எஸ்ஸி. (மனையியல்), எம்.எஸ்ஸி. (உளவியல்), எம்.எட்., எம்.ஃபில்.,பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர், மனையியல் துறை.

முனைவர். திருமதி **ரீட்டா ராணி மண்டல்**
எம்.ஏ. (பொது நிர்வாகம்), எம்.ஏ. (ஆங்கிலம்), எம்.எஸ்ஸி., (உளவியல்)
எம்.ஃபில்., (ஆங்கிலம்), எம்.எட்., எம். ஃபில்., பிஎச்.டி. (கல்வியியல்)
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

முனைவர். திருமதி **சு. ரமா**
எம்.எஸ்ஸி., (கணிதம்) எம்.எஸ்ஸி., (உளவியல்) எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.
உதவிப் பேராசிரியர், கணிதத் துறை

முனைவர். திருமதி **சி. கோமளவல்லி**
எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., (தமிழ்),
எம்.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி., (கல்வியியல்)., எம்.ஏ., (இதழியல்)
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

திரு. **ா. செல்வராஜ்**
எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.ஃபில்., (கணினி), எம்.ஃபில் (கல்வியியல்) எம்.எஸ்., பி.ஜிடி.சி.எச்.
உதவிப் பேராசிரியர், கணிப்பொறி அறிவியல் துறை,

முனைவர். திருமதி. **ஐ.சசிரேகா**
பி.எஸ்ஸி., எம்.எல்.ஐ.எஸ்ஸி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
நூலகர்

முனைவர். செல்வி. **பா. கலா ஜாஸ்மின் ஷீபாராணி**
எம்.ஏ., எம்.பி.எட்., பிஎச்.டி.,
உடற்கல்வி இயக்குநர்

டாக்டர். திருமதி. **எ.சுகன்யா எழில்,** M.B.B.S., M.D.,
(மாற்றுப்பணி)

**காலியாக உள்ள பணியிடங்கள்**

1. தமிழ்த்துறை காலிப் பணியிடம் – 1
2. ஆங்கிலத்துறை காலிப் பணியிடம் – 1
3. பொருளறிவியல் துறை உதவிப் பேராசிரியர் காலிப்பணியிடம் – 1
4. வரலாற்றுத்துறை உதவிப் பேராசிரியர் காலிப்பணியிடம் – 1
5. புவியியல் துறை உதவிப்பேராசிரியர் காலிப்பணியிடம் – 1
6. கல்வியியல் துறை உதவிப்பேராசிரியர் காலிப்பணியிடம் – 5

## அலுவலகம்

1. திருமதி. ஜே. ஜோதிபாய், கண்காணிப்பாளர்
2. திருமதி. டி. செல்வி, இளநிலை உதவியாளர்
3. திரு. என்.ஏ. விவேகானந்தர், இளநிலை உதவியாளர்
4. திரு. டி. சந்தோஷ்குமார், பதிவுரு எழுத்தர்
5. திருமதி. அ. உமா, அலுவலக உதவியாளர்

## காலியாக உள்ள பணியிடங்கள்

1. உதவியாளர் – 2
2. இளநிலை உதவியாளர் – 2
3. தட்டச்சர் – 1
4. பதிவுரு எழுத்தர் – 1
5. படச்சுருள் ஒட்டுநர் – 1
6. விடுதித் துணைக் காப்பாளர் – 2
7. துணி நெய்தல் ஆசிரியர் – 1
8. அலுவலக உதவியாளர் – 4

## ஆதாரப் பணியாளர்கள்

**காவலர்**

1. காலிப்பணியிடம் – 8

**தோட்டக்காரர்**

1. காலிப்பணியிடம் – 3

**பெருக்குபவர்**

1. திருமதி கோ. ஜோதி, (சிறப்பு நிலை)
2. திரு. த. மாரிமுத்து, (சிறப்பு நிலை)
3. காலிப்பணியிடம் – 3

**துப்புரவுப் பணியாளர்கள்**

1. திருமதி. ஏ. பவுன், (சிறப்பு நிலை)
2. காலிப்பணியிடம் – 2
3. மருத்துவ ஆயா – காலிப்பணியிடம் – 1
4. தண்ணீர் வழங்குபவர் – காலிப்பணியிடம் – 1

## கல்லூரி முதல்வர்கள்

| | | |
|---|---|---|
| 1. | செல்வி ஜெ.எம். ஜெரால்ட் | 1922 – அக். 1946 |
| 2. | செல்வி வி. கோமன் | அக். 1946 – அக். 1946 |
| 3. | திருமதி எம். லட்சுமியம்மாள் | அக். 1946 – ஏப். 1950 |
| 4. | திருமதி. என். நல்லமுத்து ராமமூர்த்தி | ஏப். 1950 – அக். 1950 |
| 5. | செல்வி. எம். வர்கீஸ் | 1950 – 1951 |
| 6. | திருமதி. எம். லட்சுமியம்மாள் | ஜன. 1951 – ஏப். 1951 |
| 7. | செல்வி. வர்கீஸ் | ஏப். 1951 – ஆக. 1956 |
| 8. | திருமதி. தேவகி தாமோதரன் | 1956 – 1958 |
| 9. | குமாரி பி. அகல்யா பாய் | 1958 – 1961 |
| 10. | குமாரி எஸ். பங்கஜம் | 1961 – 1965 |
| 11. | திருமதி. என். சண்முக சுந்தரம் | 1965 – 1970 |
| 12. | திருமதி. ஸ்டெல்லா சவுந்தரராஜ் | 1970 – 1972 |
| 13. | குமாரி கே. ஜெகதாம்பாள் | ஜூலை 1972 – செப் 72 |
| 14. | திருமதி. இனயதுனிசா பனவர் | அக் 1972 – நவ. 1972 |
| 15. | குமாரி டி. துரைசாமி | 1972 – 1974 |
| 16. | திருமதி. சி.ஆர். பங்கஜாட்சி | ஜூலை 1974 – அக். 1974 |
| 17. | திருமதி. என். சண்முகசுந்தரம் | 1974 – 1975 |
| 18. | திருமதி. சி.ஆர். பங்கஜாட்சி | 1975 – 1977 |
| 19. | முனைவர் திருமதி. சுலோச்சனா சேகர் | 1977 – 1988 |
| 20. | முனைவர் திருமதி. உஷா ருபகண்டே | 1988 – 1989 |
| 21. | முனைவர் திருமதி. கிருஷ்ணவேணி அருணாச்சலம் | 1989 – 1991 |
| 22. | திருமதி. எஸ். மீனாட்சி | 1991 – 1996 |
| 23. | முனைவர் திருமதி. எம். மித்ரா | ஜூலை 1996 – நவ. 96 |
| 24. | திரு. ஜி. கருணாகரன் | 1996 – 1997 |
| 25. | முனைவர் திருமதி. பி.டி. இராஜலட்சுமி | செப். 1997 – பிப்.2000 |
| 26. | முனைவர் திருமதி. இராணி கந்தசாமி | பிப்.2000 – மே.2001 |
| 27. | திருமதி. கா. முகமது நூருன்னிசா | 30.06.01 – 31.05.03 |
| 28. | திருமதி. ஷீலாபோஸ் | அக்டோபர் 03 – ஜனவரி 2005 |
| 29. | திருமதி. ஆர். மல்லிகா தேவி | 04.02.05 – 31.05.2006 |
| 30. | திருமதி. சந்திரா சாந்தகுமார் | 01.07.06 – 06.06.07 |
| 31. | திருமதி. நிர்மலா தேவராஜ் | 03.08.07 – 13.06.08 |
| 32. | முனைவர் திருமதி. கிருபா சார்லஸ் | 17.07.08 – 31.05.09 |
| 33. | முனைவர் கோ. விஜயலட்சுமி (பொறுப்பு) | 01.06.09 – 31.05.10 |
| 34. | முனைவர் க. பரமேஸ்வரி (பொறுப்பு) | 01.06.10–15.10.12 |
| 35. | முனைவர் பி.ஆர். உமாராணி | 15.10.12 – 10.07.13 |
| 36. | முனைவர் க. பரமேஸ்வரி | 11.07.13 – 13.05.15 |
| 37. | முனைவர் திருமதி. இரா.பாரதி (பொறுப்பு) | 14.05.15 – 31.05.16 |
| 38. | முனைவர் திருமதி. ம.ச.தில்லைநாயகி (பொறுப்பு) | 01.06.16 – 12.02.17 |
| 39. | முனைவர் திரு. எஸ்.கலைச்செல்வன் (பொறுப்பு) | 13.02.17 – 31.05.18 |
| 40. | முனைவர் திரு. எஸ்.கலைச்செல்வன் | 01.06.18 – 03.07.2018 |
| 41. | முனைவர் திருமதி. ம.ச.தில்லைநாயகி (பொறுப்பு) | 04.07.18 முதல் |

## சில நிபந்தனைகள்

1. ஒவ்வொரு மாணவிக்கும் கல்லூரியில் சேர்ந்த நாளிலிருந்து 50–வேலை நாட்கள் தகுதி காண் பருவமாகக் கருதப்படும். அந்நாளில் மாணவி இப்பயிற்சிக்குத் தகுதியற்றவர் என்பது கண்டுபிடிக்கப் பட்டால் முதல்வரால் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படுவார்.

2. இன்றியமையாத காரணங்கள் இருந்தாலொழிய மாணவர்கள் சாதாரணமாக விடுப்பு எடுத்தல் கூடாது. மேலும் பருவகால விடுப்பு, கிறிஸ்துமஸ், பொங்கல் போன்ற பண்டிகை விடுப்பு நாட்களைத் தொடர்ந்து, முன்போ, பின்போ விடுப்பு எடுத்தல் அனுமதிக்கப்படமாட்டாது.

2. **முதுநிலை கல்வியியல் எம்.எட். (M.Ed.) வகுப்பில் சேர்வதற்கான தகுதி** விண்ணப்பதாரர் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தில் பெற்ற இளநிலைக் கல்வியியல் (B.Ed) பட்டம் அல்லது தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு பல்கலைக்கழகத்தால் வழங்கப் பெற்ற (B.Ed) இளநிலைக் கல்வியியல் பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

3. **எம்.ஃபில் ஆய்வுப் பட்ட வகுப்பில் சேர்வதற்கான தகுதி :**

   12 வருடப் பள்ளிக் கல்வி அல்லது 11 வருட பள்ளிக் கல்வியும் ஓராண்டு புகுமுக வகுப்பும் பயின்று ஏதேனும் ஓர் இளநிலைப் பட்டம் பெற்றுக் கல்வியியல் துறையில் இளநிலைப் பட்டமும் முதுநிலைப் பட்டமும் (B.Ed & M.Ed.,) பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

4. **பிஎச்.டி பட்ட வகுப்பில் சேர்வதற்கான தகுதி :**

   தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் விதிகளுக்குட்பட்டு சேர்க்கைச் செய்யப்படும்.

# கல்லூரிக் கட்டண விவரங்கள்

| வ. எண் | கட்டணங்கள் | பி.எட்–1 | பி.எட்–2 | எம்.எட்.–1 | எம்.எட்.–2 | எம்.ஃபில் | பி.எச்.டி. |
|---|---|---|---|---|---|---|---|
| | **அரசுக் கட்டணம்** | | | | | | |
| 1. | கல்விக் கட்டணம் | 1000 | 1000 | 1500 | 1500 | 1000 | 1215 |
| 2. | சேர்க்கைக் கட்டணம் | 5 | – | 5 | – | 5 | 5 |
| 3. | மருத்துவக் கட்டணம் | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| 4. | ஆய்வகக் கட்டணம் | – | – | 20 | 20 | – | – |
| 5. | இதரக் கட்டணம் | 80 | 80 | – | – | – | – |
| | **தன் வைப்பு நிதி-I (சிறப்பு கட்டணம்)** | | | | | | |
| 6. | ஒலி மற்றும் ஒளிக் கட்டணம் | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| 7. | விளையாட்டுக் கட்டணம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 8. | ஆண்டு மலர் கட்டணம் | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| 9. | படிக்கும் அறை கட்டணம் | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| 10. | கல்லூரிப் பேரவை கட்டணம் | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| 11. | தனியாள் சோதனை பதிவேடு | 20 | – | – | – | – | – |
| 12. | சமூக பணி மன்றம் | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| 13. | கல்லூரி நாள் விழா | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| 14. | பாடி வாழ்க்கை | 50 | – | – | – | – | – |
| 15. | கல்வி சுற்றுலா | 50 | 50 | – | – | – | – |
| 16. | நூலகம் | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |
| 17. | கல்லூரி நாட்குறிப்புக் கையேடு | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| 18. | கற்பித்தல் கருவி | – | – | – | – | – | 1765 |
| | **தன் வைப்பு நிதி–II** | | | | | | |
| 19. | பொது பதிவுக் கட்டணம் | 125 | – | 125 | – | 125 | 1500 |
| 20. | விண்ணப்பப் பதிவுக் கட்டணம் | – | – | – | – | – | 750 |
| 21. | உட்கட்டமைப்பு கட்டணம் | 40 | – | 40 | – | 40 | 40 |
| 22. | பண்பாடு மற்றும் இளைஞர் விழா | 40 | – | 40 | – | 40 | 40 |
| 23. | விளையாட்டுக் கட்டணம் | 50 | – | 50 | – | 50 | – |
| 24. | நூலகம் | 50 | – | 50 | – | 50 | 180 |
| 25. | விண்ணப்ப மற்றும் தகுதி சான்று (30+250) | 280 | 30 | 30 | 30 | 30 | – |
| 26. | கொடி நாள் கட்டணம் | 5 | 5 | 5 | 5 | 5 | 5 |
| 27. | செஞ்சிலுவைக் கட்டணம் | 10 | 10 | 10 | 10 | 10 | 10 |
| 28. | பட்டமளிப்பு கட்டணம் | 25 | 25 | 25 | 25 | 25 | 25 |

**குறிப்பு : மேலே குறித்த கட்டணங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை.**

எம்.எட். மற்றும் எம்.ஃபில். மற்றும் பி எச்.டி கல்வி பயிலும் மாணவிகள் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் தவிர்த்து இதர பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்கள் தகுதிச் சான்றிதழ் கட்டணமாக ரூ. 280/–யை செலுத்த வேண்டும். இதர மாணவிகள் ரூ. 30/–மட்டும் சான்றிதழ் கட்டணம் செலுத்தினால் போதுமானது.

## இளநிலைக் கல்வியியல் பட்டப்படிப்பு முதலாமாண்டு

### முதல் பருவம்

### எழுத்துத் தேர்வு பாடங்கள்

**பகுதி - அ**

1. கற்றல் கற்பித்தலில் உளவியல் – 1
2. தற்கால இந்தியாவும் கல்வியும்
3. கல்வியும் சமூகமயமாக்கலும்
4. தகவல் தொழில் நுட்பம் மூலம் கற்றல் மேம்பாடு

**பகுதி - ஆ**

1. தமிழ் – 1
2. ஆங்கிலம் – 1
3. வரலாறு – 1
4. புவியியல் – 1
5. கணிதம் – 1
6. பொருளறிவியல் – 1
7. உயிரறிவியல் – 1
8. மனையியல் – 1
9. கணிப்பொறி அறிவியல் – 1

### இரண்டாம் பருவம்

**பகுதி - அ**

1. கற்றல் கற்பித்தலில் உளவியல் – 2
2. கற்றல் கற்பித்தல்
3. கற்றல் மதிப்பீடு

**பகுதி - ஆ**

1. தமிழ் – 2
2. ஆங்கிலம் – 2
3. வரலாறு – 2
4. புவியியல் – 2
5. கணிதம் கற்பித்தல் – 2

Principal
Staff Incharge

6. பொருளறிவியல் – 2

7. உயிரறிவியல் – 2

8. மனையியல் – 2

9. கணிப்பொறி அறிவியல் – 2

**பகுதி - இ** (ஏதாவது ஒன்று)

1. யோகா, உடல்நலம் மற்றும் உடற்கல்வி
2. கலைத்திட்டத்தில் மொழி

## செய்முறைப் பாடங்கள்

### தொகுதி – அ – கற்பித்தல் பயிற்சி தொடர்புடையவை

| வ. எண் | பதிவேடு | நிலை 1 | நிலை 11 | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1. | நுண்நிலை கற்பித்தல் | 25 | 25 | 50 |
| 2. | செய்து காட்டல் | 10 | 10 | 20 |
| 3. | உற்றுநோக்கல் பதிவேடு | 10 | 10 | 20 |
| 4. | பள்ளிப் பாடம் (உள்ளடக்க தேர்ச்சி) முதல் பருவம் – 6th, இரண்டாம் பருவம் 7th | 30 | 30 | 60 |
| 5. | கல்வி உளவியல் சோதனைகள் | | | 50 |
| 6. | புதுமை பள்ளிகளைப் பார்வையிடல் | | | 10 |
| 7. | சிறப்பு பள்ளிகளைப் பார்வையிடல் | | | 10 |
| 8. | பள்ளிப் பாட புத்தகத் திறன் ஆய்வு | | | 20 |
| 9. | சமுகம் சார்ந்த திட்டம் | | | 20 |
| 10. | கல்வி தொழில் நுட்ப வேலை | | | 20 |
| 11. | கணினி நடைமுறை எழுத்தறிவு | | | 20 |
| 12. | யோகா உடல் நலம் மற்றும் உடற்பயிற்சி | | | 20 |
| 13. | மொழித் திறனை பலப்படுத்துதல் (ஆங்கிலம்) | | | 30 |
| 14. | ஒப்படைப்பு தயாரித்தல் | | | 10x25 = 250 |
| | | மொத்தம் | | 600 |

## இளநிலைக் கல்வியியல் பட்டப்படிப்பு இரண்டாமாண்டு

## மூன்றாம் பருவம்

**பகுதி - அ**

1. கல்வியியல் பாலினம்சார் பிரச்சனைகள்
2. பாடங்கள் மற்றும் பாடப்பிரிவுகளைப் புரிந்து கொள்ளல்

**பகுதி - ஆ**

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் | – 3 |
| 2. | ஆங்கிலம் | – 3 |
| 3. | வரலாறு | – 3 |
| 4. | புவியியல் | – 3 |
| 5. | கணிதம் | – 3 |
| 6. | பொருளறிவியல் | – 3 |
| 7. | உயிரறிவியல் | – 3 |
| 8. | மனையியல் | – 3 |
| 9. | கணிப்பொறி அறிவியல் | – 3 |

## நான்காம் பருவம்

**பகுதி - அ**

1. அறிவு மற்றும் கலைத் திட்ட செயல்பாடுகள்
2. உள்ளடங்கிய கல்வி கண்ணோட்டங்கள்
3. பள்ளி மேலாண்மை

**பகுதி - ஆ**

| | | |
|---|---|---|
| 1. | தமிழ் | – 4 |
| 2. | ஆங்கிலம் | – 4 |
| 3. | வரலாறு | – 4 |
| 4. | புவியியல் | – 4 |
| 5. | கணிதம் | – 4 |
| 6. | பொருளறிவியல் | – 4 |
| 7. | உயிரறிவியல் | – 4 |
| 8. | மனையியல் | – 4 |
| 9. | கணிப்பொறி அறிவியல் | – 4 |

**பகுதி - இ** (ஏதாவது ஒன்று)

1. சுற்றுச் சூழல் கல்வி
2. அறிவுரை பகர்தல் மற்றும் வழி காட்டுதல்

## இரண்டாம் ஆண்டு - செய்முறைப் பாடங்கள்

### தொகுதி – அ . கற்பித்தல் பயிற்சி தொடர்புடையவை

| வ. எண் | பதிவேடு | நிலை 1 | நிலை 11 | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|
| 1. | கற்பித்தல் திறமை மதிப்பீடு | 100 | 100 | 200 |
| 2. | பாடத்திட்டம் (நிலை I-30, நிலை II-30) | 50 | 50 | 100 |
| 3. | செயல்முறை ஆராய்ச்சி | – | – | 15 |
| 4. | தேர்வு மற்றும் அளவீட்டு பதிவு | 25 | 25 | 50 |
| 5. | கற்பித்தல் துணைக் கருவிகள் | 50 | 50 | 100 |
| 6. | வலைத்தள பகுப்பாய்வு அறிக்கை | – | – | 20 |
| 7. | ஆற்றல் குறிப்பு நெகிழி (Power Point) | 20 | 20 | 40 |
| 8. | சமூக பயனுள்ள ஆக்க வேலை பதிவேடு | – | – | 25 |
| 9. | பள்ளியில் பராமரிக்கப்படும் பதிவுகளின் அறிக்கை | – | – | 20 |
| 10. | நிறுவனத்தின் கல்வி சாரா செயல்பாடுகளின் அறிக்கை | – | – | 20 |
| 11. | களப் பயண பதிவேடு | – | – | 25 |
| 12. | நாடகம் மற்றும் கலைத்திறன் பதிவேடு | – | – | 25 |
| 13. | பள்ளிப்பாடம் (உள்ளடக்க தேர்ச்சி) 3ஆம் பருவம் – 8th, 9th 4ஆம் பருவம் 10th | – | – | 25 |
| 14. | மொழித் திறனை பலப்படுத்துதல் (English) | – | – | 30 |
| 15 | தனியாள் ஆய்வு | – | – | 20 |
| 16 | இதழ் பிரதிபலிப்பு (Reflective Journal) | – | – | 25 |
| 17 | ஒப்படைப்பு | – | – | 8x25=200 |
| | மொத்தம் | | | 1000 |

## புறத் தேர்வு

### வினாத்தாள் வடிவமைப்பு

| பகுதி | வினாவகைகள் | கேள்விகள் | மதிப்பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பகுதி – A | மிகக்குறுகிய வினா | 12வினாக்களுள் ஏதாவது 10 | 2 | 20 |
| பகுதி – B | குறுகிய வினா | 6 வினாக்களுள் ஏதாவது 4 | 5 | 20 |
| பகுதி – C | கட்டுரை வினா | 3 (உள் தெரிவு) | 10 | 30 |
| | மொத்தம் | | | 70 |

## முதுகலைக் கல்வியியல் பட்டப்படிப்பு முதலாமாண்டு

### முதல் பருவம்

### எழுத்துத் தேர்வு பாடங்கள்

**பகுதி - அ**

1. இந்தியாவில் கல்வியின் வரலாற்று மற்றும் அரசியல் பொருளாதாரம்
2. ஆராய்ச்சி முறை மற்றும் புள்ளியியல் அறிமுகம்

**பகுதி - ஆ** (ஏதாவது ஒன்று)

1. பாலின பிரச்சனைகள் – பெண்கள் ஆய்வுகள்
4. உள்ளடங்கிய கல்வி

### இரண்டாம் பருவம்

**பகுதி - அ**

1. மேம்பட்ட கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் புள்ளியியல்
2. மேம்பட்ட கல்வி உளவியல்

**பகுதி - ஆ** (ஏதாவது ஒன்று)

3. அமைதி மற்றும் மதிப்புக் கல்வி
4. உயர்கல்வி

### செய்முறைப் பாடங்கள்

| வரிசை எண் | செயல்கள் | மொத்தம் மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | கூட்டுப் பள்ளி பயணம் (School Visit) | 50 |
| 2. | களப் பயணம் (2 வாரங்கள்) (Institution Visit) | 75 |
| 3. | தகவல் தொடர்பு திறன்கள் | 50 |
| 4. | சுய மேம்பாடு – யோகா | 50 |
| 5. | ஆய்வு முன்னறிக்கை தயாரித்தல் | 75 |
| | மொத்தம் | 300 |

## முதுகலைக் கல்வியியல் பட்டப்படிப்பு இரண்டாமாண்டு

### மூன்றாம் பருவம்

**பகுதி - அ**

1. கல்வியில் தத்துவவியல் மற்றும் சமூகவியல் கண்ணோட்டம்
2. கலைத்திட்ட மேம்பாடு மற்றும் கற்பித்தல் தொழில் நுட்பம்

**பகுதி - ஆ**

3. முன் பருவ, தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலை கல்வி
4. கல்வி திட்டமிடலும் நிர்வாகமும்

### நான்காம் பருவம்

**பகுதி - அ** (ஏதாவது ஒன்று)

1. கல்வியியல் தொழில் நுட்பம்
2. உலகளாவிய கண்ணோட்டத்தில் ஆசிரியர் கல்வி

**பகுதி - ஆ** (ஏதாவது ஒன்று)

3. பன்னாட்டு சூழலில் கல்வி
4. வாழ்நாள் கற்றல்

### செய்முறை பாடங்கள்

| வரிசை எண் | செயல்கள் | மொத்தம் மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1. | i) ஆய்வேடு | 150 |
| | ii) ஆய்வேடு – வாய்மொழித் தேர்வு | 50 |
| 2. | சமூகம் சார்ந்த சந்திப்புக்கள் | 50 |
| 3. | தொடர்பு திறன்கள் – கல்வி எழுத்து | 50 |
| 4. | பயிற்சி | 50 |
| 5. | களப் பயணம் | 50 |
| | மொத்த மதிப்பெண்கள் | 400 |
| | | |

**வினாத்தாள் வடிவமைப்பு**

| பகுதி | வினாவகைகள் | கேள்விகள் | மதிப்பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பகுதி – A | மிகக்குறுகிய வினா | 7 வினாக்களுள் ஏதாவது 5 | 5 | 25 |
| பகுதி – B | கட்டுரை வினா | 3 (உள் தெரிவு) | 15 | 45 |
| | மொத்தம் | | | 70 |

விடைத்தாள் இரட்டை முறையில் மதிப்பீடு செய்யப்படும்.

## இளநிலைக் கல்வியியல் மற்றும் முதுநிலைக் கல்வியியல் (பி.எட்., எம்.எட்.,) பட்டப் படிப்பிற்குரிய மதிப்பீட்டு முறை

எழுத்துத் தேர்வு

| | |
|---|---|
| மதிப்பீட்டு முறை : | மதிப்பெண்கள் |
| புற மதிப்பீடு | 70 |
| அக மதிப்பீடு | 30 |
| **மொத்தம்** | **100 மதிப்பெண்கள்** |

| | |
|---|---|
| அகமதிப்பீடு | (30 மதிப்பெண்கள்) |
| ஒப்படைப்பு | 5 மதிப்பெண்கள் |
| கருத்தரங்கு | 5 மதிப்பெண்கள் |
| வகுப்புத் தேர்வுகள் | 10 மதிப்பெண்கள் |
| மாதிரித் தேர்வு | 7 மதிப்பெண்கள் |
| வருகைப் பதிவேடு | 3 மதிப்பெண்கள் |

ஒவ்வொரு பருவத்திலும் 75% குறைவான வருகைப் பதிவு உடையவர்கள் பருவ இறுதித் தேர்வை எழுத இயலாது. பள்ளியில் கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ளும் காலத்தில் எவ்வித விடுப்பும் எடுத்தல் கூடாது.

**தேர்ச்சி அளவுகோல் :**

நான்கு பருவ நிறைவுத் தேர்வுகளிலும் ஒவ்வொரு தாளிலும் 50% மதிப்பெண் பெற்றவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவர்.

60% மேல் மதிப்பெண் பெற்றவர்கள் முதல் வகுப்பிலும் 50% முதல் 59% வரை மதிப்பெண் பெற்றவர்கள் இரண்டாம் வகுப்பிலும், தேர்ச்சி பெற்றவராக அறிவிக்கப்படுவார். முதல் முறையாகத் தேர்வு எழுதும் பொழுது அனைத்துத் தாள்களையும் எழுத வேண்டும். தேர்ச்சி பெற தவறிய மாணவர்கள் சேர்க்கைப் பெற்ற மூன்று ஆண்டுகளுக்குள் அத் தேர்வுகளை எழுதி பட்டப் படிப்பினை நிறைவு செய்யவேண்டும்.

## எம்ஃபில் (ஆய்வியல் நிறைஞர்) பட்ட வகுப்பின் பாடங்கள், மதிப்பீட்டு முறை

| பாடங்கள் | | மதிப்பெண்கள் புற மதிப்பீடு | அக மதிப்பீடு | மொத்தம் |
|---|---|---|---|---|
| பொதுப்பாடம் – 1 | ஆய்வியல் நெறிமுறைகள் மற்றும் புள்ளியியல் | 60 | 40 | 100 |
| பொதுப்பாடம் – 2 | கல்வியியல் மேலாண்மை | 60 | 40 | 100 |
| அகத்தாள் – | ஆய்வு சார்பான தாள் | 60 | 40 | 100 |
| ஆய்வேடு : | புறத்தேர்வர் வாய்மொழித்தேர்வு | – | 25 | |
| | புறத்தேர்வர் மதிப்பீடு | – | 75 | 100 |
| | மொத்த மதிப்பெண்கள் | | | 400 |

**வினாத்தாள் வடிவமைப்பு**

ஒவ்வொரு தாளும் 60 மதிப்பெண்ணிற்கும் மூன்று மணி நேரத்திற்குள் எழுதப்பட வேண்டும்.

1. ஒவ்வொரு வினாத்தாளிலும் ஏழு கேள்விகள் உண்டு. ஏழாவது கேள்வி கட்டாயம் எழுதப்பட வேண்டும்.
2. முதல் ஆறு கேள்விகளுள் 4 எழுதப்படவேண்டும். அவற்றுள் இரு பிரிவு உண்டு.

| | |
|---|---|
| a – 6 மதிப்பெண், b – 4 மதிப்பெண் | 4 X 10 = 40 |
| கட்டுரை வினா (உள் தெரிவு முறை) | 1 X 20 = 20 |
| | 60 |

விடைத்தாள் இரட்டை மதிப்பீடு முறையில் மதிப்பிடப்படும்.

**தேர்ச்சி அளவுகோல்**

ஒவ்வொரு தாளிலும் 50% மதிப்பெண் பெற்றவர்கள் மட்டுமே தேர்ச்சி பெற்றவராகக் கருதப்படுவர்.

60% மேலே மதிப்பெண் பெற்றவர்கள் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றவராக கருதப்படுவர். தேர்ச்சி பெற தவறிய மாணவர்களுக்கு எழுத்துத் தேர்விற்கு மீண்டும் எழுத இரண்டு முறையும், ஆய்வேட்டை மறுசமர்ப்பித்தலுக்கு ஒருமுறையும் வாய்ப்பளிக்கப்படும். மாணவர்கள் சேர்க்கைப் பெற்ற ஆண்டிலிருந்து எழுத்துத் தேர்வையும், ஆய்வேட்டையும் மூன்று ஆண்டுக்குள் நிறைவு செய்தால் மட்டுமே பட்டத்திற்குத் தகுதி பெற்றவராவர். பகுதி நேர மாணவியராயின் நான்கு ஆண்டுகளுக்குள் நிறைவு செய்ய வேண்டும்.

"அருட் செல்வஞ் செல்வத்துள் செல்வம்"

## வருகைப் பதிவு - விடுப்பு

1. மாணவியர் கல்லூரிக்கு வராத நாட்களுக்கான விடுப்பு விண்ணப்பத்தைப் பொறுப்பாசிரியர் வழியாக முன்கூட்டியே முதல்வருக்கு அனுப்ப வேண்டும்.
2. எந்த மாணவியேனும் விடுப்பு விண்ணப்பமின்றித் தொடர்ந்து ஐந்து நாட்கள் கல்லூரிக்கு வராமலிருந்தால் அம்மாணவியின் பெயர் வருகைப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும்.
3. இது ஓர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி என்பதால் மாணவியர்கள் ஒழுங்குமுறைமையைக் கடைபிடித்தல் அவசியமாகும். மேலும் கல்லூரியின் அனைத்துச் செயல்பாடுகளிலும் ஆர்வமுடன் ஈடுபடுதல் வேண்டும்.
4. 75 சதவீதம் வருகை நாட்களுடைய மாணவியர்கள் மட்டுமே பல்கலைக்கழகத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.
5. உதவித் தொகை பெறும் மாணவி கல்வியாண்டின் மொத்த பணி நாட்களில் 90 சதவீதத்திற்குக் குறையாமல் கல்லூரிக்கு வருகை தருதல் வேண்டும்.

## சீருடை

திங்கட்கிழமை மற்றும் கல்லூரி விழா நாட்களிலும், முதல்வர் குறிப்பிடும் நாட்களிலும் தூய்மையான சீருடை (சேலை) அணிதல் வேண்டும். அறிவுறுத்தப்படுகிற உடை அமைப்பு சேலையாகும்.

## பொறுப்பாசிரியர் முறைமை (Tutorial System)

**நோக்கம்:**

1. மாணவியரின் கல்வி, பொதுநிலைத் தொடர்பானவைகளிலும், வாழ்வியல் முன்னேற்றச் செயல்களிலும் துணை செய்தல் மற்றும் வழி நடத்துதல்.
2. ஆசிரியர்களுக்கும் மாணவியருக்கும் இடையே உள்ள உறவினை வலுவாக்க வாய்ப்புக்களை உருவாக்குதல்.

**மாணவியர் கடமை :**

1. மாணவியர் தம் பொறுப்பாசிரியரைச் சந்தித்து உரிய உதவி, ஆலோசனைகளைப் பெறலாம்.
2. தங்கள் விடுப்பு விண்ணப்பங்களைத் தங்கள் பொறுப்பாசிரியரிடம் கையொப்பம் பெற்ற பின்னரே முதல்வரிடம் தருதல் வேண்டும்.
3. போக்குவரத்துப் பயணச் சலுகை விண்ணப்பம், கல்வி உதவித் தொகை, கல்வி கட்டணச் சலுகை விண்ணப்பங்கள் பொறுப்பாசிரியரால் பரிந்துரைக்கப்பட்ட பின்னரே முதல்வரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

## கல்லூரிப் பேரவை

இக்கல்லூரி மாணவியர்கள் அனைவரும் பேரவை அங்கத்தினர்களாவர். இதன் பொறுப்பு அங்கத்தினர்கள் எண்ணிக்கை 9. இவ்வங்கத்தினர்கள் கல்வி ஆண்டின் ஆரம்பத்தில் தேர்தல் விதி முறைகளின்படி இளநிலைக் கல்வியியல் வகுப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப்பேரவையின் செயல்பாடுகளைக் கல்லூரியின் இரு பேராசிரியர்கள் கண்காணிப்பார்கள்.

இக்கல்லூரியில் நடைபெறுகின்ற முக்கிய விழாக்கள், கூட்டங்கள் போட்டிகள் அனைத்தும் இப்பேரவை ஏற்பாடு செய்கின்றது.

## மாணவியரின் பகடி வதை ஒழிப்புக்குழு (ANTI RAGGING COMMITTEE)

கல்லூரி மாணவியர்கள் தங்களுக்குள் மனம் வருந்தும்படியான எவ்வித கேலி நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்க, இரு பேராசிரியர்கள் தலைமையிலான இக்குழு கண்காணிப்புப் பணியினை மேற்கொள்கிறது.

## நூலகம்

கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பெரிய நூலகம் ஒன்று கல்லூரியின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. ஆசிரியர்கள் மற்றும் பயிற்சி ஆசிரியர்கள் அனைவருக்கும் இந்நூலகம் பொதுவானது. இந்நூலகத்தில் பல்துறை நூல்கள், ஆய்வேடுகள், நாவல்கள், செய்தித்தாள்கள், மாத, வார, பருவ இதழ்கள் நூலகத்திற்கு வரவழைக்கப்படுகின்றன.

## மின் நூலகம்

நமது நிறுவன நூலகத்தில் மின் நூலகம் அமைந்திருப்பதால் **M.Phil.,** மற்றும் **Ph.D.** மாணவர்கள் ஆராய்ச்சி கட்டுரைகளையும், மின் புத்தகங்களையும் **(E Books) &** மின் ஆய்விதழ்களையும் **(E-Journals)** கணிணி வழியாகவே பெற்று பயனடைகின்றனர்.

1. மாணவியர் குறிப்பேடு மற்றும் எழுதுபொருள் தவிர வேறு எவற்றையும் நூலகத்துள் எடுத்துச் செல்லக்கூடாது.
2. மாணவியர் நூலகத்துள் அமைதி காத்திடுதல் அவசியமாகும்.

"நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி"

3. பார்வை நூல்கள் தவிரப் பிற நூல்கள் மாணவியருக்குக் கடனாகக் கொடுக்கப்படும்.
4. ஒவ்வொரு மாணவியரும் இரண்டு புத்தகங்கள் எடுக்கலாம்.
5. 15 நாட்கள் வரை புத்தகத்தை மாணவியர் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவர். அதற்கு மேல் செல்லும் வாரம் ஒவ்வொன்றுக்கும் ரூ.1/– வீதம் ஒறுப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.
6. எடுத்த புத்தகங்களில் கோடிடவோ, எழுதவோ, பக்கங்களைக் கிழிக்கவோ கூடாது. அவ்வாறு செய்தால் அபராதம் செலுத்த வேண்டும். அல்லது அதே புத்தகத்தின் புதிய நகல் ஒன்றை வாங்கிக் கொடுக்கவேண்டும்.
7. நூலகத்திலிருந்து எடுக்கப்பட்ட எல்லாப் புத்தகங்களையும், நூலகக் கடன் சீட்டுக்களையும் நூலகருக்குத் திருப்பிக் கொடுத்த பின்னர் தான் தேர்வு எழுத நுழைவுச் சீட்டு (Hall Ticket) வழங்கப்படும்.
8. கோடை விடுமுறையின் போது புத்தகம் தரப்படமாட்டாது.
9. தாம் நூலகத்தில் பெற்ற புத்தங்களை இழப்பின், இழந்த நூல்கட்குப் பதில் அதே புதிய நூல் வாங்கித் தர வேண்டும். அல்லது அதற்குரிய தொகையை (நூலின் விலை + 25%) ஒறுப்புத் தொகையாகச் செலுத்துதல் வேண்டும். அரிதான நூல்கள் தொலைந்திடும் நிகழ்வுகளில் நூலின் விலையில் 2 மடங்கு ஒறுப்புத் தொகையாக வசூலிக்கப்படும்.

## உடற்பயிற்சிக் கல்வி

உடற்பயிற்சிக் கல்வி, ஆசிரியப் பயிற்சி மாணவியருக்குக் கட்டாயமானதாகும். உடற்கல்வி இயக்குநரின் வழிகாட்டலின் கீழ் உடற்பயிற்சிக் கல்வி எழுத்து மற்றும் செய்முறைப் பயிற்சிகளாக வழங்கப்படுகிறது.

## மருந்தகம்

முழுநேர மருந்தகம் ஒன்று கல்லூரியுடன் இணைந்துள்ளது. முழுநேர மருத்துவர் ஒருவர் உள்ளார். மாணவியரின் நோய்களுக்கு உடனடியாக மருத்துவம் செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் மருத்துவப் பரிசோதனையும் மாணவியருக்குச் செய்யப்படுகிறது.

## பெற்றோர் ஆசிரியர் கழகம்

இக்கல்லூரியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்காக உதவிடும் வகையில் பெற்றோர் / ஆசிரியர்கள் அளிக்கும் ஆலோசனைகள் / கருத்துக்களின் அடிப்படையில் நல்ல முறையில் செயலாற்றி வருகிறது.

## முன்னாள் மாணவியர் கழகம்

இக்கல்லூரியில் முன்னாள் மாணவியர் கழகம் சிறப்பாகச் செயல்படுகிறது. இந்நாள் பயிலும் மாணவியரின் கல்வி முன்னேற்றத்திற்கு உரிய வகையில் நிதியுதவி மற்றும் சிறந்த ஆலோசனைகள் அளித்து வருகிறது.

## மாணவியர் மையம் *(Non-Resident Centre)*

விடுதியில் தங்காத மாணவியர்கள் பயன்படுத்துவதற்காக மாணவியர் மையம் ஒன்று உள்ளது.

## விடுதி

கல்லூரி வளாகத்துள்ளேயே மாணவியர் விடுதி அமைந்துள்ளது. கல்லூரி முதல்வரே அதன் காப்பாளர் ஆவார். விடுதித் துணைக் காப்பாளர் ஒருவர் உண்டு.

விடுதியில் தங்குபவர்கள் விடுதியின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும்.

1. விடுதியிலுள்ள மாணவியர்கள் பருவத்திற்கு ஒரு முறை தான் வார இறுதி விடுமுறை நாட்களைக் கழிக்க வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
2. முதல்வரின் அனுமதியுடன் மட்டுமே விடுதியை விட்டு வெளியே செல்ல முடியும். தேவை ஏற்பட்டால் அனுமதி மறுக்கவும் முதல்வருக்கு உரிமை உண்டு.
3. பார்வையாளர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டும் அனுமதிக்கப்படுவார்கள். பார்வையாளர்கள் மாணவியர் விடுதியின் எல்லைக்குள்ளேயே சந்தித்துப் பேச வேண்டுமேயன்றி, கல்லூரியின் வேறு எந்த இடத்திலும் சந்தித்தலாகாது.
4. ஏற்கனவே விடுதி விண்ணப்பத்தில் மாணவியரால் குறிப்பிடப் பட்டுள்ள ஆண் பார்வையாளர்கள் மட்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 3 மணியிலிருந்து 5 மணி வரை அனுமதிக்கப்படுவார்கள்.
5. ஒருவருக்கு வரும் பார்வையாளர்களுடன் பிற மாணவியர்கள் பேசக் கூடாது.
6. விடுமுறையைக் கழிக்க வெளியே சென்றாலும், கோவிலுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ சென்றால் அதற்குரிய புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். செல்லும் நேரம், திரும்பும் நேரம் ஆகியவை தவறாமல் குறிக்கப்பட வேண்டும்.
7. மாலை ஆறு மணிக்கு மேல் விடுதியை விட்டு வெளியில் செல்ல அனுமதி இல்லை.
8. மாணவியர் விடுதியில் காலை, மாலை இரு வேளைகளிலும் படிப்பதற்கென ஒதுக்கப்பட்ட நேரத்தில் அமைதி காத்திடுதல் வேண்டும்.

9. மாணவியர் விடுதியில் துப்புரவு பேண வேண்டும்.
10. மேற்குறிப்பிட்ட விதிகளை மீறுதல் பெருங்குற்றமாகக் கருதப்படும். மீறுபவர் மீது ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படும்.

விடுதிக் கட்டணங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பம் | ரூ. | 50.00 |
| 2. | சேர்க்கைக் கட்டணம் | ரூ. | 50.00 |
| 3. | பதிவுக் கட்டணம் | ரூ. | 50.00 |
| 4. | எச்சரிக்கை முன் பணம் | ரூ. | 4000.00 |
| 5. | விடுதியமைப்புக் கட்டணம் (10 மாதத்திற்கு சேர்த்து) | ரூ. | 500.00 |
| 6. | அறை வாடகை (10 மாதத்திற்கு சேர்த்து) | ரூ. | 50.00 |
| 7. | தேய்மான கட்டணம் | ரூ. | 200.00 |
| 8. | தணிக்கை | ரூ. | 50.00 |
| 9. | மருத்துவம் | ரூ. | 25.00 |
| 10. | விடுதி நாள் | ரூ. | 200.00 |
| | மொத்தம் | ரூ. | 5175.00 |

விடுதியில் சேருங்காலத்தில் மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

## படிப்பு உதவித் தொகைகள்

ஆதிதிராவிட மற்றும் பழங்குடி வகுப்பினரைச் சார்ந்த மாணவியர்களுக்கும், பிற்பட்ட / மிகவும் பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த மாணவியர்களுக்கும் தமிழக அரசின் நலத்துறைகளால் வழங்கப்படும் உதவித் தொகை கல்லூரி முதல்வரின் பரிந்துரையின் பேரில் பெற்றுத் தரப்படும்.

## ஜீலை - 2018

| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 2 | திங்கள் | I | இரண்டாம் ஆம் ஆண்டு பிஎட், எம்எட், மாணவியருக்கு கல்லூரித் திறப்பு | 1 |
| 3 | செவ்வாய் | II | | 2 |
| 4 | புதன் | III | | 3 |
| 5 | வியாழன் | IV | | 4 |
| 6 | வெள்ளி | V | | 5 |
| 7 | சனி | VI | | 6 |
| 8 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 9 | திங்கள் | I | பி.எட்.,, இரண்டாம் ஆண்டு கற்பித்தல் பயிற்சித் தொடக்கம் | 7 |
| 10 | செவ்வாய் | II | | 8 |
| 11 | புதன் | III | | 9 |
| 12 | வியாழன் | IV | | 10 |
| 13 | வெள்ளி | V | | 11 |
| 14 | சனி | - | விடுமுறை | – |
| 15 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 16 | திங்கள் | VI | | 12 |
| 17 | செவ்வாய் | I | | 13 |
| 18 | புதன் | II | | 14 |
| 19 | வியாழன் | III | | 15 |
| 20 | வெள்ளி | IV | | 16 |
| 21 | சனி | V | | 17 |
| 22 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 23 | திங்கள் | VI | | 18 |
| 24 | செவ்வாய் | I | | 19 |
| 25 | புதன் | II | | 20 |
| 26 | வியாழன் | III | | 21 |
| 27 | வெள்ளி | IV | | 22 |
| 28 | சனி | V | | 23 |
| 29 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 30 | திங்கள் | VI | | 24 |
| 31 | செவ்வாய் | I | | 25 |
| | | | மொத்த வேலை நாட்கள் – 25 | |

| ஆகஸ்டு - 2018 | | | | |
|---|---|---|---|---|
| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
| 1 | புதன் | II | பி.எட். முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கம் | 1 |
| 2 | வியாழன் | III | | 2 |
| 3 | வெள்ளி | IV | | 3 |
| 4 | சனி | V | | 4 |
| 5 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 6 | திங்கள் | VI | | 5 |
| 7 | செவ்வாய் | I | | 6 |
| 8 | புதன் | II | | 7 |
| 9 | வியாழன் | III | | 8 |
| 10 | வெள்ளி | IV | | 9 |
| 11 | சனி | - | விடுமுறை | – |
| 12 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 13 | திங்கள் | V | பி.எட்., முதலாமாண்டு நுண்ணிலை கற்பித்தல் பயிற்சி தொடக்கம் | 10 |
| 14 | செவ்வாய் | VI | | 11 |
| 15 | புதன் | - | விடுமுறை – சுதந்திரத் திருநாள் | – |
| 16 | வியாழன் | I | | 12 |
| 17 | வெள்ளி | II | | 13 |
| 18 | சனி | III | | 14 |
| 19 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 20 | திங்கள் | IV | | 15 |
| 21 | செவ்வாய் | V | | 16 |
| 22 | புதன் | - | பக்ரீத் – விடுமுறை | – |
| 23 | வியாழன் | VI | | 17 |
| 24 | வெள்ளி | I | பி.எட்., முதலாமாண்டு நுண்ணிலை கற்பித்தல் பயிற்சி நிறைவு | 18 |
| 25 | சனி | - | விடுமுறை | – |
| 26 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 27 | திங்கள் | II | | 19 |
| 28 | செவ்வாய் | III | | 20 |
| 29 | புதன் | IV | | 21 |
| 30 | வியாழன் | V | | 22 |
| 31 | வெள்ளி | VI | | 23 |
| | | | மொத்த வேலை நாட்கள் – 23 25+23= 48 | |

# செப்டம்பர் - 2018

| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | சனி | - | விடுமுறை | – |
| 2 | ஞாயிறு | - | விடுமுறை – கிருஷ்ண ஜெயந்தி | – |
| 3 | திங்கள் | I | பி.எட். முதலாமாண்டு உற்றுநோக்கல் பயிற்சி தொடக்கம் | 1 |
| 4 | செவ்வாய் | II | | 2 |
| 5 | புதன் | III | ஆசிரியர் தினம் | 3 |
| 6 | வியாழன் | IV | | 4 |
| 7 | வெள்ளி | V | உற்றுநோக்கல் பயிற்சி நிறைவு | 5 |
| 8 | சனி | - | விடுமுறை | – |
| 9 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 10 | திங்கள் | VI | | 6 |
| 11 | செவ்வாய் | I | | 7 |
| 12 | புதன் | II | | 8 |
| 13 | வியாழன் | - | விடுமுறை விநாயகர் சதுர்த்தி | – |
| 14 | வெள்ளி | III | | 9 |
| 15 | சனி | - | விடுமுறை | – |
| 16 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 17 | திங்கள் | IV | பி.எட் முதலாமாண்டு மாதிரிக் கற்பித்தல் | 10 |
| 18 | செவ்வாய் | V | | 11 |
| 19 | புதன் | VI | | 12 |
| 20 | வியாழன் | I | | 13 |
| 21 | வெள்ளி | - | விடுமுறை – மொகரம் | – |
| 22 | சனி | II | | 14 |
| 23 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 24 | திங்கள் | III | | 15 |
| 25 | செவ்வாய் | IV | | 16 |
| 26 | புதன் | V | பேரவைத் தேர்தல் | 17 |
| 27 | வியாழன் | VI | | 18 |
| 28 | வெள்ளி | I | பேரவைத் தொடக்க விழா | 19 |
| 29 | சனி | II | | 20 |
| 30 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| | | | மொத்த வேலை நாட்கள் – 20 48 + 20 = 68 | |

| அக்டோபர் - 2018 | | | | |
|---|---|---|---|---|
| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
| 1 | திங்கள் | III | எம்.எட். முதலாமாண்டு பள்ளிப் பார்வை – தொடக்கம் | 1 |
| 2 | செவ்வாய் | - | விடுமுறை – காந்தி ஜெயந்தி | – |
| 3 | புதன் | IV | | 2 |
| 4 | வியாழன் | V | | 3 |
| 5 | வெள்ளி | VI | | 4 |
| 6 | சனி | I | | 5 |
| 7 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 8 | திங்கள் | II | | 6 |
| 9 | செவ்வாய் | III | | 7 |
| 10 | புதன் | IV | | 8 |
| 11 | வியாழன் | V | | 9 |
| 12 | வெள்ளி | VI | எம்.எட் முதலாமாண்டு பள்ளிப் பார்வை நிறைவு | 10 |
| 13 | சனி | - | விடுமுறை | – |
| 14 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 15 | திங்கள் | I | | 11 |
| 16 | செவ்வாய் | II | | 12 |
| 17 | புதன் | III | பி.எட். இரண்டாமாண்டு கற்பித்தல் பயிற்சி – நிறைவு | 13 |
| 18 | வியாழன் | - | விடுமுறை – சரஸ்வதி பூஜை | – |
| 19 | வெள்ளி | - | விடுமுறை – விஜயதசமி | – |
| 20 | சனி | - | விடுமுறை | – |
| 21 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 22 | திங்கள் | IV | | 14 |
| 23 | செவ்வாய் | V | | 15 |
| 24 | புதன் | VI | | 16 |
| 25 | வியாழன் | I | | 17 |
| 26 | வெள்ளி | II | | 18 |
| 27 | சனி | III | | 19 |
| 28 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 29 | திங்கள் | IV | | 20 |
| 30 | செவ்வாய் | V | | 21 |
| 31 | புதன் | VI | | 22 |
| | | | மொத்த வேலை நாட்கள் – 22 68 + 22 = 90 | |

# நவம்பர் - 2018

| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | வியாழன் | I | | 1 |
| 2 | வெள்ளி | II | | 2 |
| 3 | சனி | - | விடுமுறை | – |
| 4 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 5 | திங்கள் | - | விடுமுறை | – |
| 6 | செவ்வாய் | - | விடுமுறை – தீபாவளித் திருநாள் | – |
| 7 | புதன் | - | விடுமுறை | – |
| 8 | வியாழன் | III | | 3 |
| 9 | வெள்ளி | IV | மாதிரித் தேர்வு – தொடக்கம் | 4 |
| 10 | சனி | - | விடுமுறை | – |
| 11 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 12 | திங்கள் | V | | 5 |
| 13 | செவ்வாய் | VI | | 6 |
| 14 | புதன் | I | | 7 |
| 15 | வியாழன் | II | | 8 |
| 16 | வெள்ளி | III | | 9 |
| 17 | சனி | IV | முதற் பருவ இறுதிப் பணிநாள் | 10 |
| 18 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 19 | திங்கள் | | முதற்பருவ இறுதித் தேர்வு தொடக்கம் | |
| 20 | செவ்வாய் | | | |
| 21 | புதன் | | | |
| 22 | வியாழன் | | | |
| 23 | வெள்ளி | | | |
| 24 | சனி | | | |
| 25 | ஞாயிறு | | | |
| 26 | திங்கள் | | | |
| 27 | செவ்வாய் | | | |
| 28 | புதன் | | முதற்பருவ இறுதித் தேர்வுகள் நிறைவு | |
| 29 | வியாழன் | | விடுமுறை | |
| 30 | வெள்ளி | | விடுமுறை | |
| | | | மொத்த வேலை நாட்கள் – 10   90 + 10 = 100 | |

| டிசம்பர் - 2018 | | | | |
|---|---|---|---|---|
| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
| 1 | சனி | - | விடுமுறை – மிலாடிநபி | – |
| 2 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 3 | திங்கள் | I | இரண்டாம் பருவம் – தொடக்கம் | 1 |
| 4 | செவ்வாய் | II | | 2 |
| 5 | புதன் | III | | 3 |
| 6 | வியாழன் | IV | | 4 |
| 7 | வெள்ளி | V | | 5 |
| 8 | சனி | - | விடுமுறை | – |
| 9 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 10 | திங்கள் | VI | | 6 |
| 11 | செவ்வாய் | I | | 7 |
| 12 | புதன் | II | | 8 |
| 13 | வியாழன் | III | | 9 |
| 14 | வெள்ளி | IV | | 10 |
| 15 | சனி | V | | 11 |
| 16 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 17 | திங்கள் | VI | | 12 |
| 18 | செவ்வாய் | I | | 13 |
| 19 | புதன் | II | | 14 |
| 20 | வியாழன் | III | | 15 |
| 21 | வெள்ளி | IV | | 16 |
| 22 | சனி | - | விடுமுறை | – |
| 23 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 24 | திங்கள் | V | | 17 |
| 25 | செவ்வாய் | - | விடுமுறை – கிறிஸ்துமஸ் | – |
| 26 | புதன் | VI | | 18 |
| 27 | வியாழன் | I | | 19 |
| 28 | வெள்ளி | II | | 20 |
| 29 | சனி | III | | 21 |
| 30 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 31 | திங்கள் | IV | | 22 |
| | | | மொத்த வேலை நாட்கள் – 22 | |

| ஜனவரி - 2019 | | | | |
|---|---|---|---|---|
| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
| 1 | செவ்வாய் | - | விடுமுறை – ஆங்கிலப் புத்தாண்டு | – |
| 2 | புதன் | V | | 1 |
| 3 | வியாழன் | VI | | 2 |
| 4 | வெள்ளி | I | | 3 |
| 5 | சனி | II | | 4 |
| 6 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 7 | திங்கள் | III | | 5 |
| 8 | செவ்வாய் | IV | | 6 |
| 9 | புதன் | V | | 7 |
| 10 | வியாழன் | VI | | 8 |
| 11 | வெள்ளி | I | | 9 |
| 12 | சனி | - | விடுமுறை | – |
| 13 | ஞாயிறு | - | விடுமுறை – போகித் திருநாள் | – |
| 14 | திங்கள் | - | விடுமுறை – பொங்கல் திருநாள் | – |
| 15 | செவ்வாய் | - | விடுமுறை – திருவள்ளுவர் தினம் | – |
| 16 | புதன் | - | விடுமுறை – உழவர் திருநாள் | – |
| 17 | வியாழன் | II | | 10 |
| 18 | வெள்ளி | III | | 11 |
| 19 | சனி | IV | | 12 |
| 20 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 21 | திங்கள் | V | நுண்கலை மன்றப் போட்டிகள் | 13 |
| 22 | செவ்வாய் | VI | | 14 |
| 23 | புதன் | I | | 15 |
| 24 | வியாழன் | II | | 16 |
| 25 | வெள்ளி | III | | 17 |
| 26 | சனி | - | விடுமுறை – குடியரசு தினம் | – |
| 27 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 28 | திங்கள் | IV | | 18 |
| 29 | செவ்வாய் | V | | 19 |
| 30 | புதன் | VI | சர்வோதய தினம் | 20 |
| 31 | வியாழன் | I | | 21 |
| | | | மொத்த வேலை நாட்கள் – 20 : 22 + 21 = 43 | |

| பிப்ரவரி - 2019 | | | | |
|---|---|---|---|---|
| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
| 1 | வெள்ளி | II | | 1 |
| 2 | சனி | III | | 2 |
| 3 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 4 | திங்கள் | IV | | 3 |
| 5 | செவ்வாய் | V | | 4 |
| 6 | புதன் | VI | | 5 |
| 7 | வியாழன் | I | | 6 |
| 8 | வெள்ளி | II | முத்தமிழ் விழா | 7 |
| 9 | சனி | - | விடுமுறை | – |
| 10 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 11 | திங்கள் | III | | 8 |
| 12 | செவ்வாய் | IV | | 9 |
| 13 | புதன் | V | | 10 |
| 14 | வியாழன் | VI | | 11 |
| 15 | வெள்ளி | I | | 12 |
| 16 | சனி | II | | 13 |
| 17 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 18 | திங்கள் | III | | 14 |
| 19 | செவ்வாய் | IV | | 15 |
| 20 | புதன் | V | | 16 |
| 21 | வியாழன் | VI | | 17 |
| 22 | வெள்ளி | I | | – |
| 23 | சனி | - | விடுமுறை | – |
| 24 | ஞாயிறு | - | விடுமுறை | 18 |
| 25 | திங்கள் | II | | 19 |
| 26 | செவ்வாய் | III | | 20 |
| 27 | புதன் | IV | | 21 |
| 28 | வியாழன் | V | விளையாட்டு விழா | 22 |
| | | | மொத்த வேலை நாட்கள் – 22 : 43 + 22 = 65 | |

# மார்ச் - 2019

| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளி | VI | பி.எட்., எம்.எட். முதலாமாண்டு செய்முறைத் தேர்வு | 1 |
| 2 | சனி | I | | 2 |
| 3 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 4 | திங்கள் | II | | 3 |
| 5 | செவ்வாய் | III | | 4 |
| 6 | புதன் | IV | | 5 |
| 7 | வியாழன் | V | | 6 |
| 8 | வெள்ளி | VI | மகளிர் தின விழா | 7 |
| 9 | சனி | - | விடுமுறை | – |
| 10 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 11 | திங்கள் | I | | 8 |
| 12 | செவ்வாய் | II | | 9 |
| 13 | புதன் | III | கல்லூரி நாள் விழா | 10 |
| 14 | வியாழன் | IV | பேரவை நிறைவு விழா | 11 |
| 15 | வெள்ளி | V | எம்.எட் 2 ஆம் ஆண்டு மாதிரி வாய்மொழித் தேர்வு | 12 |
| 16 | சனி | VI | | 13 |
| 17 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 18 | திங்கள் | I | | 14 |
| 19 | செவ்வாய் | II | | 15 |
| 20 | புதன் | III | பி.எட் இரண்டாமாண்டு செய்முறைத் தேர்வு | 16 |
| 21 | வியாழன் | IV | | 17 |
| 22 | வெள்ளி | V | | 18 |
| 23 | சனி | - | விடுமுறை | – |
| 24 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 25 | திங்கள் | VI | | 19 |
| 26 | செவ்வாய் | I | | 20 |
| 27 | புதன் | II | எம்.எட் 2 ஆம் ஆண்டு வாய்மொழித் தேர்வு | 21 |
| 28 | வியாழன் | III | | 22 |
| 29 | வெள்ளி | IV | வளாக நேர்முகத் தேர்வு | 23 |
| 30 | சனி | | விடுமுறை | – |
| 31 | ஞாயிறு | | விடுமுறை | – |
| | | | மொத்த வேலை நாட்கள் – 23 : 65 + 23 = 88 | |

| ஏப்ரல் - 2019 | | | | |
|---|---|---|---|---|
| நாள் | கிழமை | நாள் | விவரம் | வேலை நாட்கள் |
| 1 | திங்கள் | V | | 1 |
| 2 | செவ்வாய் | VI | | 2 |
| 3 | புதன் | I | | 3 |
| 4 | வியாழன் | II | | 4 |
| 5 | வெள்ளி | III | | 5 |
| 6 | சனி | - | விடுமுறை – தெலுங்கு வருடப் பிறப்பு | – |
| 7 | ஞாயிறு | - | விடுமுறை | – |
| 8 | திங்கள் | IV | மாதிரித் தேர்வு தொடக்கம் | 6 |
| 9 | செவ்வாய் | V | | 7 |
| 10 | புதன் | VI | | 8 |
| 11 | வியாழன் | I | | 9 |
| 12 | வெள்ளி | II | | 10 |
| 13 | சனி | III | மாதிரித் தேர்வு – நிறைவு | 11 |
| 14 | ஞாயிறு | - | விடுமுறை – தமிழ்ப் புத்தாண்டு | – |
| 15 | திங்கள் | IV | இறுதிப் பணிநாள் | 12 |
| 16 | செவ்வாய் | - | இறுதி பருவத் தேர்வு தொடக்கம் | |
| 17 | புதன் | | விடுமுறை – மகாவீரர் ஜெயந்தி | |
| 18 | வியாழன் | | | |
| 19 | வெள்ளி | | விடுமுறை – புனித வெள்ளி | |
| 20 | சனி | | | |
| 21 | ஞாயிறு | | விடுமுறை | |
| 22 | திங்கள் | | | |
| 23 | செவ்வாய் | | | |
| 24 | புதன் | | | |
| 25 | வியாழன் | | | |
| 26 | வெள்ளி | | | |
| 27 | சனி | | | |
| 28 | ஞாயிறு | | விடுமுறை | |
| 29 | திங்கள் | | | |
| 30 | செவ்வாய் | | இறுதி பருவத் தேர்வு நிறைவு | |
| | | | மொத்த வேலை நாட்கள் – 12 : 88 + 12 = 100 | |

# விலிங்டன் சீமாட்டி
# கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்

(தன்னாட்சி)

## விடுப்பு விண்ணப்பம்

1. மாணவி பெயர் :

2. வகுப்பு :

   சுழலெண் :

3. சிறப்புப் பாட இணைவு :

4. விடுப்பு நாள் :

5. விடுப்பிற்கான காரணம் :

6. பெற்றோர் கையொப்பம் :

7. பொறுப்பாசிரியர் கையொப்பம் :

8. துறைத் தலைவர் பரிந்துரை :

9. முதல்வர் ஆணை

# கால அட்டவணை

| நாள் | முதல் பாட வேளை | இரண்டாம் பாட வேளை | மூன்றாம் பாட வேளை | நான்காம் பாட வேளை | | ஐந்தாம் பாட வேளை | ஆறாம் பாட வேளை | ஏழாம் பாட வேளை |
|---|---|---|---|---|---|---|---|---|
| I | | | | | உணவு இடைவேளை | | | |
| II | | | | | | | | |
| III | | | | | | | | |
| IV | | | | | | | | |
| V | | | | | | | | |
| VI | | | | | | | | |